உ

சிவமயம்

# நவமலர்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் கழகம் வருடாந்த

# விஜயதசமி வெளியீடு



ஓம் சகதி! ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி

ஸீந்தர வதனி ஸீகுண மனோஹரி
மந்தஹால முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே.

-சாது ஸ்ரீ முருகதாஸ்-

**மன்மத வருடம் ஐப்பசித் திங்கள் 5ஆம் நாள்**

22.10.2015

# அதிபரின் ஆசிச் செய்தி

கல்லூரிச் சமய நிகழ்வுகளில் நவராத்திரி தினம் முக்கிய இடத்தினை வகிக்கிறது. அண்டமெல்லாம் பரந்து விளங்குகின்ற ஆதிசக்தியினை முப்பெருந்தேவிகளாக உருவகித்து வழிபாடாற்றி வேண்டுவனவற்றையெல்லாம் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமாக இக் காலப்பகுதி அமைகின்றது.யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நவராத்திரி தினம் இவ் வருடம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்து இளைஞர் கழகத்தினால் வழமையாக வெளியிடப்படம் நவமலர் இவ் வருடமும் சிறப்பாக வெளியிடப்படுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சைவப்பாரம்பரியத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட கல்லூரியாகும். சைவ சமய நெறிமுறைகளோடு சமூகத்தில் வாழும் மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டம் என்பதெ ஸ்தாபகர்களின் சிந்தனையுமாகும். அதற்கிணங்க கல்லூரியில் சமய விழாக்கள், குருபூசைத்தினங்கள், தல யாத்திரைகள், ஆன்மீகப்பயிற்சி என்பவற்றில் மாணவர்கள் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றார்கள். இச் செயற்பாடுகள் மாணவர்களை நல் வழியில் வழிப்படுத்தும் என நம்புகிறேன்.இவற்றையெல்லாம் முன்னெடுத்து வரும் இந்து இளைஞர் கழகத்தினை நான் பாராட்டுகிறேன். இச் செயற்பாடுகள் வளர்ந்தோங்க வேண்டுமென வாழ்த்தி எல்லாம் வல்ல சிவஞான வைரவப்பெருமானின் அருள் வேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.

ஐ.தயானந்தராசா
அதிபர்

## தேவாரம்

**பண்:யாழ்முரி** **தாளம்: ரூபகம்**

**ராகம்: அடாணா** **தலம் :திருத்தரும புரம்**

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையெனமகிழ்வர்
பூதவி னப்படை நின் றிசை பாடவு மாடுவ
ரவர் பபா சடைந்நெடுமுடியதொர் புனலர்
வேதமொ டேழிசைமா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கும வர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயி றரும புரம்பதியே

## திருவாசகம்

**பண் :முல்லை**

**இராகம் :மோகனம்** **தலம் :தில்லை**

இன்றெனக் கருளி இருள் கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றதின் தன்மை நினைப்பற நினைத்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்ற சென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப் பெரும் துறையுறை சிவனே
ஒன்றும் நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே

## திருவிசைப்பா

தற்பரம் பொருளேசசிகண்ட சிகண்டா
சாம கண்டா அண்டவாணா
நற்பெரும் பொருளாய் உரை கலந் துன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன் உன் உள்ளத்தளவிலா உன்னைத்
தந்த பொன்னம்பலத் தாடீ
கற்பமாய் உலகாய் அல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமோ கருதே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொன்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட்
செய்மின் குழாம் புகுந்து
அண்டங்கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ள பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொழிவு கண்டார்த்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

**ராகம் :ரேவதி**

பிறவியலை யாற்றினிற் புகுகாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிருகு வாக்கியப் பொருளாலே
உனது பதகா சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளானே
அறிவுளரி வார்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகை பெருமானே

திருச்சிற்றம்பலம்

## நிர்வாகக் குழு

**பரவலர்**
ஐ.தயானந்தராஜா

**துணைபுரவலர்**
சதா.நிமலன்
ந.பரமேஸ்வரன்

**பெரும் தலைவர்**
ஆ.நவநீதகிருஷ்ணண்

**பெரும் செயலாளர்**
ந.விபுலன்

**பெரும் பொருளாளர்**
ச.அகிலன்

**தலைவர்**
வி.சாரங்கன்
**உப தலைவர்**
**ஸ்ரீ.பிரணவன்**

**செயலாளர்**
ப.தர்சனன்
உப செயலாளர்
இ.மதுசன்

**பொருளாளர்**
நி.நிருஷன்

**பத்திராதிபர்**
பு.ரவிசாந்

**விழா அமைப்பாளர்**
ஜெ.சதுர்ஸனன்
உ.லக்ஸ்மன்
அ.யதிசன்

## நிர்வாகக் குழு(2015 விசேட)

1. வி.சாரங்கன்
2. ப.தர்சனன்
3. ஸ்ரீ.ரிரணவன்
4. இ.மதுசன்
5. நி.நிரூபன்
6. பு.ரவிசாந்
7. ஸ்ரீ.ஸ்ரீசங்கீதன்
8. சா.பிரவீன்
9. த.ஆஞ்ஜெயன்
10. அ.யதீசன்
11. வி.சிவப்பிரியன்
12. ச.குலராஜ்
13. சி.கபில்ராஜன்
14. ஜெ.சதுர்சனன்
15. ஆ.அச்சுதன்
16. இ.அனுஜன்
17. சு.டினோஜன்
18. உ.லக்ஸ்மன்
19. கோ.பானுஜன்
20. சி.ரவிராஜ்
21. கஇவாகீசன்
22. ப.பவதாரகன்
23. சு.நாகதிசன்

### ஆலோசனைக்குழு

திரு.வா.சிவராசா
திரு.தி.சிவகுமாரன்
திருப.கஜேந்திரன்
திரு.அ.ஜெயந்தன்
திரு.சி.ஞானறஞ்சன்
திரு.சி.ரகுபதி
திரு.பா.சற்குணராஜா
திரு.நா.விமலநாதன்
திருமதி.சு.வடிவாம்பிகை
திருமதி.க.வாமதேவன்
செல்வி.நா.வினித்தா

## இந்து இளைஞர் கழக உறுப்புரிமை பெற்ற அங்கத்தவர்கள்

### தரம் 06

1. பா.ரகுராம்
2. கு.ஐங்கரன்
3. கோ.பிறையளகன்
4. ம.பிரவீன்
5. ப.டினேஸ்ராம்
6. சங்கரநாதன்
7. வித்தியாசாகர்
8. மதிசுதன்
9. பு.கோபிகன்

### தரம் 07

1. பே.சிவசங்கர்
2. இ.அஜந்தன்
3. த.ஆதித்யன்
4. கு.ராகுலன்
5. எ.மொபிசன்
6. ம.திருமாறன்
7. வி.கிருஸ்ணபாலன்
8. சி.ரங்கன்

### தரம் 08

1. ச.சுபப்பிரியன்
2. உ.சுபிதன்
3. உ.கவிநீலவன்
4. ர.சிந்துஜன்
5. அ.கஜரூபன்
6. க.தனோஜன்

### தரம் 09

1. ப.பவதாரகன்
2. இ.நிமல்
3. மோ.திவ்யகரன்
4. ப.நிலாயன்
5. சு.வித்தியாபவன்
6. லோ.தவக்குமரன்
7. பா.ஆதிரதயன்
8. இ.அபிநயன்
9. ஜெ.மாதவன்
10. ம.ஹரிகரன்
11. க.வாகீசன்
12. கு.சரன்
13. சி.சிறிசங்கர்
14. சு.நாகதீசன்

### தரம் 10

1. க.விதுர்சன்
2. உ.சாருஜன்

# சகல கலாவல்லி மாலை



ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!- 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே!- 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே!- 03

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!- 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!- 05

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!- 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!- 07

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே.!- 08

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!- 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச்செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே!- 10

# சிவபுராணம்

*பண் - முல்லை*

*திருச்சிற்றம்பலம்*



**தொல்லை இரும்பிறவிச் சூழும்தளை நீக்கி**
**அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னும் தேன்.**

*நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க*
*இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க*
*கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க*
*ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க- 01*

*வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க*
*புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க*
*கரம்குவிவாருண் மகிழும் கோன் கழல்கள் வெல்க*
*சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க- 02*

*ஈசனடி போற்றி! எந்தையடி போற்றி*
*தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி*
*நேயத்தே நின்ற நிமலனடி போற்றி*
*மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி*
*சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி- 03*

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்- 04

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்- 05

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்- 06

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே- 08

ஆக்கமளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்நின் றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே- 09

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை - 10

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய- 11

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்- 12

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்- 13

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே- 14

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின் -15

நோக்கரியநோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய் - *16*

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேயோ என்றென்று- *17*

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப்புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே- *18*

அல்லற் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. - *19*

திருச்சிற்றம்பலம்

சித்திரை மாதத்தில் வரும்வசந்த நவராத்திரி விழா இவளுக்குரிய சிறப்பான விழாவாகும்.

**அன்னபூரணி**

லலிதா தேவியின் உபாங்கமாகத் திகழ்பவள் .வலக்கையில் பொன் அகப்பையும் இடக்கையில் மணிகள் பதித்த பொற்கலத்தில் பாற்சோறும் கொண்டு உலக உயிர்களுக்கெல்லாம் உணவளிக்கும் அன்புத்தாயாக விளங்குபவள்.பொன்னிற மேனியினள் பொற்கலனும் பூமாலையும் தரித்தவள் காசித்தலத்தை தன்னுடையபிரதான கோயிலாகக் கொண்டவள்.

**வாக் வாதினி**

இந்த வாக்வாதினியானவள் வெண்டாமரைமலரில் வீற்றிருப்பாள் பாரதி எனும் திருநாமத்தாள் இரண்டு திருக்கையிலும் எழுதுகோலும் புத்தகமும் ஏந்தியவள் இளம்பிறை சூடியவள் வெண்ணிறத்தவள் உலக வாழ்வில் அச்சத்தை போக்குபவள் இராஜமதங்கியின் உபாங்க தேவதையானவள் இவளைக் கலை மகளின் கூறாக கருதுவாரும் உளர்.

**துர்க்கை**

பராசக்தியின் காவற் படைத்தலைவி ஆபத்துக் காலத்தில் அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கி அருள் புரிபவள் துக்கம் என்பது அகழி பகைவர் மதிலை அனுகாது அகழி காப்பது போல தன்னை வழிபடும் அன்பர்களை துன்பங்கள் வராமல் காப்பவள் அதனால் தான் இவளுக்கு துர்க்கைஎன்று பெயர் அரசரும் வீரரும் வழிபடுகின்ற தெய்வம் புரட்டாதி மாதத்தில் வருகின்ற நவராத்திரியில் கௌரி லட்சுமி சரஸ்வதி ஆகிய மூவரும் சேர்ந்த அம்சமாக திகழ்பவள் அக்கினிகலை சூரியகலை சோமகலை என்ற மூன்றையும் தன்பாற் கொண்டவள் ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்ந்த வெட்சிப்பூவைத் தூவி துக்கருத்தம் எனும் மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்து வழிபட்டால் எல்லா இன்னல்களும் பிணியும் நோயும் விலகிப் போகும் நான்கு திருக்கரங்களிலும் சங்கு சக்கரம் வில் அம்பு ஏந்தியிருப்பாள் தலையில்முடியும்பிறையும் உடையவள் சிங்க வாகனத்தில் வருபவள் சிலவேளைகளில் மட்டும் மானைத்தனது வாகனமாகக் கொள்பவள் பசும்புல் நிறந்தவள்.

## ஆதி பராசக்தி பதம் போற்றுவோம்

அகிலாண்ட கோடிப்பிரமாண்ட நாயகியாகியான அன்னை ஆதி பராசக்தி ஆனவள் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் பதினான்கு லோகங்களையும் தன்னுடைய திருவருட் பிரவாகத்தினால் நல்லாட்சி புரிந்து வருகின்றாள் சக்தியில்லையேல் சிவனில்லை என்பார்கள் இப் பரந்த நிலவுலகில் படைக்கப்பட்டிருக்கும் சகல ஜீவராசிகளும் தாய்க்குத் தாயாக நீக்கமற நிறைந்து எதிலும் பூரணமாக விளங்கி சர்வ வியாபியாக காட்சி தருபவள் ஆதிபராசக்தி ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனாக விளங்கும் பரங்கருணைத்தடங்களாகிய கருணையே உருவானவரும் உலகுக்கு கருத்தாவாக விளங்கி திருவருள் பொழியும் எல்லாம் வல்ல சிவபெருமான் தமது சக்திக்கு தம்மிலேயே பாதி இடங்கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக காட்சி தருகின்றார்.

## அம்பிகையின் அருள் வடிவங்கள்

**பாலாம்பாள்**

நான்கு திருக்கரங்களிலும் அக்கமாலை புத்தகம், அபய முத்திரை, வரத முத்திரை கொண்டிருப்பாள். நீலோற்பவ மலரில் வீற்றிருப்பாள் செந்நிறமேனியினள் மூன்று அல்லது ஆறு எழுத்துக்களைக் கொண்ட மூல மந்திரத்தை உடையவள்.

**லலிதாம்பிகை**

சிந்தாமணியில் அமைந்த மாளிகையில் பிரம்மா, விஸ்ணு, உருத்திரன், ஈஸ்வரன், ஆகிய நால்வரையும் கால்களாகக் கொண்ட கட்டிலில் காமேஸ்வரனின் மடியில் வீற்றிருப்பாள் பதினாறாண்டினள் பாசம், அங்குசம், பஞ்சபுராணம் கரும்பு வில் ஏந்தியவள் பிறை சூடியவள் ரோஜா மலர் போன்ற சிவந்த மேனியையுடையவள் இவளில் மூல மந்திரம் பதினைந்து எழுத்துக்களைக் கொண்டு பன்னிரு வகையில் அமையும். காஞ்சியில் எழுந்தருளியுள்ள காமாட்சியே லலிதாம்பிகையாக உள்ளாள்.

**இராஜராஜேஸ்வரி**

லலிதா தேவியைப் போன்ற திருவுருவத்தை உடையவள் இருபத்தெட்டு எழுத்துக்களால் ஆன மகா, ஸோட்சி எனும் மூல மந்திரத்தை கொண்டவள் ஸ்ரீ வித்தையேபொதுவானசாத்திரமாகும் ஞானத்தின முழு

வரலாற்றுக்கு முற்பட காலத்தில் இருந்து சக்தி வழிபாடு நிலவியது வேதங்களில் இதிகாசங்களில் புராணங்களில் நிறைந்து இன்று எங்கெங்கு காணினும் சக்தியடா என்று குறிப்பிடும் அளவிற்கு தாய்த்தெய்வமானவள் இம்மை வாழ்வில் உழன்று இன்னலுறும் மாந்தர்களுக்கு அபயமளிக்கும் தாய் ஆதி பராசக்தி நவராத்திரி காலங்களில் அன்னையை இறுகப் பற்றி அவள் பாதங்களை சரணடைந்தோர் ஈடேறுவதுஉறுதி.

தொகுப்பு

**திரு.ஆ.நவநீதகிருஷ்ணன்**
**பெருந் தலைவர்**
**இந்து இளைஞர் கழகம்**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

## இறை மகத்துவம்

கல் தோன்றி மண் தோன்றிய காலத்திலே வேரூன்றிய தருவாய் கிளைகள் பரப்பி வியாபிக்கும் விருட்சமாய் இந்து சமயம் எம் மனதில் அகலக்காலூன்றி நிற்கிறது. நாம் இந்துக்கள் என்று பெருமை கொள்ள வைக்கின்ற தொன்மைச்சிறப்பு, விஞ்ஞானத்தோடு ஒத்துப்போகிற தத்துவ விசாரணைகள் இற்றைக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கோட்பாடும் கொள்கைகளும் இன்று மாற்றமின்றி இப்படியே பின்பற்றப்படுகிறது.

யாழ் நகரில் இந்துக் கல்லூரிகளாக எத்தனையோ பாடசாலைகள் அந்த வகையில் யாழ் இந்துக்கல்லூரியும் தினம் நானும் இந்து என்று எம்மை எல்லாம் இறும்பூது கொள்ளச் செய்கிறது. இந்நிலையில் இந்து சமயமும் மாணவ சமூகமும் பற்றிய பார்வை நோக்கு இன்றைய காலத்தின் தேவை.

இன்றைய காலம் வெகுவாக மாறிவிட்டது கணனிக்குள் உலகை கண்டவர்கள் அதனை கைப்பேசிக்குள் மாற்றிக் கொண்டனர். இன்று சமூகம் பழமை என்பதால் பலவற்றை கழித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இதற்கு மாறாக சமயங்கள் உன் பாட்டன் செய்தார் உன் அப்பனும் அப்படியே செய்தார் நீயும் செய் என்று ஓர் நியாயம் கூறினால் இளைய சமூகம் அதனை ஏற்கத்தயார் இல்லை இதனால் இயல்பிலேயே சமயம் பழையது என்ற எண்ணம் இளைஞர்கள் மத்தியில் விதைக்கப்படுகிறது. இதனை மாற்றி காரண காரியங்களுடன் விஞ்ஞான விளக்கங்களை இணைத்து சமய நம்பிக்கையை புகுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

புராணங்கள் எல்லாம் புழுகு மூட்டைகள் என்றும் கட்டுக்கதைகள் என்றும் விமர்சனம் செய்யும் இளவட்டத்தை சோடனைகளை பற்றிய கவன ஈர்ப்பு இல்லாமல் உள்ளார்ந்த உணர்வுகளை பற்றி விழுமியங்களை பற்றி சிந்திக்கத் தூண்ட வேண்டும்.

கடவுட் கொள்கை , உருவ வழிபாடு என்பன பற்றிய தெளிவு இன்னும் எம்மவர்களிடம் இல்லை இதனால் அவர்களின் குறையை இந்து தர்மத்தின் முறையாகவே மாற்றி விட்டனர்.உங்களுக்கு எத்தனை கடவுள்கள்? இப்படியான கேள்வி அடிக்கடி என் காதில் விழுந்ததுண்டு......

ஒரு சிறு உதாரணம் மூலம் விளக்கலாம்.அன்பு என்ற உன்னதமான விடயத்தை நண்பனில் கொண்டால் நட்பு, தந்தையில் கொண்டால் பாசம், தேசத்தில் கொண்டால் பற்று, வயதொத்த ஒரு பெண்ணிடம் கொண்டால் காதல், இறைவனிலகொண்டால் பக்தி இப்படி இருக்க உனக்கெத்தனை அன்பு என்று கேள்வி கேட்க முடியுமா? அது போலத்தான் ஏகம் சத் விப்ரா வகுதா வதந்தி என்கிறோம் ஒரே ஒரு இறைவனை பல பெயர் கொண்டு கூறுகிறோம்.

இப்படி தீர்க்கப்பட்ட சந்தேகங்கள் தாராளம் எம் மாணவர்களுக்கு சைவ சமயத்தை அதிக புள்ளி எடுக்கும் பாடமாக அல்லது வாழவியலாக காணவேண்டும் சந்தேகங்கள் எவற்றிற்கும் சமயத்தில் பதில் இல்லாமல் இல்லை அதை நாம் தான் தேட வேண்டும். இன்றைய மாணவர்களே நாளைய சமயத்தின் காவலர்கள் என்ற பொறுப்புணர்வு எமக்கிருக்க வேண்டும்.

மேன்மை கொள் சைவ நிதி விளங்குக
உலகமெல்லாம்

**வி.சாரங்கன்**
**தலைவர்**
**இந்து இளைஞர் கழகம்**

## அறிவியலும் ஆன்மீகமும்

இயற்கை நெறியாய் தோன்றிய இந்து சமயம் இன்றும் உலக அரங்கில் உன்னத சமயமாக திகழ்கிறது. இன்றைய விஞ்ஞான உலகம் எதற்கும் ஏன்? எதற்கு? எப்படி? என்று தத்துவ விசாரனை செய்ய பழக்கப்பட்டிருக்கிறது. அதனால் இன்று சமய நம்பிக்கையும் சடங்காசாரமும் எம்மவர்களால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது. ஆகவே எம் மெஞ்ஞானத்தில் உள்ள விஞ்ஞான உண்மைகளை நிறுவிக்காட்ட வேண்டிய தேவை எமக்குள்ளது.

இவ்வாறான தார்மிகப்பணியை இச் சிறு கட்டுரையில் அடக்கிக் காட்ட முடியாதெனினும் பாற்கடல் நக்குகின்ற பூனையாய் சிலவற்றை விளக்கி தெளிவிக்க விளைகிறேன்.

நம்மவர்கள் மஞ்சளை புனித பொருளாக பார்க்கின்றனர். அதில் தெய்வீகம் காண்கின்றனர். விஞ்ஞானிகள் அதனை தொற்று நீக்கியாய் கிருமி கொல்லியாய் காண்கின்றனர். வாழையிலையில் உணவுண்பதனை வெறுமனே வழக்கமாக புனிதமாக நாம் பார்க்க விஞ்ஞானம் சூடாக வாழையிலையில் உணவிடும் போது அதில் இலையின் ஊட்டச்சத்துக்கள் உள்வாங்கப்படுவதாக கூறுகின்றனர்.

சந்தனம் வைப்பதை சைவச்சின்னம் என்கிறோம்.நவீன யுகம் அதனை குளிர்மை என்கிறது. நெற்றியில் திலகம் அணிவது கற்புக்கு காப்பு என்பர் ஆனால் நரம்பு மையத்தில் திலகமிடும் இடம் உள்ளது. பெண்களை கிப்னாட்டிசம் போன்றவற்றிலிருந்து மீட்கும் என்று விஞ்ஞானம் சொல்கிறது.

மெட்டி அணிவது திருமணத்தின் பின் அடையாளம் ஆனால் அவ்விடம் நரம்பில் ஓட்டத்தில் புத்துணர்வை ஏற்படுத்தும் கருப்பையை குளிர்மையாக்குவதாய் மருத்துவர்கள் கூறுகின்றனர். மூக்குத்தி போடுவது அன்றிலிருந்து பின்பற்றப்படுகிறது. ஆனால் அது ஓர் அக்கபஞ்சர் மருத்துவ முறை.

குட்டித் தோப்புக்கரணம் போடுகிறோம் அது மூளையை புத்துணர்ச்சிப்படுத்தும் Super brain Yoga என்கிறது. இன்றைய விஞ்ஞானம்.

ஆலயங்களை ஆலமரம்,அரசமரம், வேப்பமரம் என்று மருத்துவ குணம் நிறைந்த மரங்களடியில் வைக்கிறோம். உலகில் சூரியமைய கொள்கை முன்வைக்கப்படும் முன்பே நாம் நவக்கிரகங்களின் நடுவே சூரியனை வைத்தோம்.

உலக இயக்கத்திற்கு காரணமாய் இருப்பது ஐந்தொழில் புரியும் இறைவன் அப்பேற்றப்பட்ட தொழிலை குறிக்கும் வடிவம் நடராஜ வடிவம் இது உலகின் இயக்கத்திற்கு காரணமான அணுவின் அசைவின் வடிவில் உள்ளதாய் இன்று நாசாவில் நடராஜர் சிலை வைக்கப்பட்டது.

எத்தனையோ ஆண்டுகளாக திண்ணையில் இருந்து எம்மவர்கள் எப்போதோ நடக்க போகும் கிரகணங்களையும் நட்சத்திர அசைவையும் துல்லியமாக கணக்கிடுகின்றனர். இப்படி விந்தையான விஞ்ஞானம் எம் கீழைத்தேசத்து முதுசொத்துக்கள்.

இவற்றை பேணிக்காப்போம்.

தமிழர்கள் சொல்கிறார்கள் என்பதால் தரமானவற்றை அலட்சியப்படுத்துவது அறிவல்ல என்பதை உணர்வோம்.

**ப.தர்சனன்**
**செயலாளர்**
**இந்து இளைஞர் கழகம்.**

## நவராத்திரி விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்

### தங்கப்பதக்கத்திற்கான நாவன்மைப் போட்டி

கீழ் பிரிவு தரம் 6, 7, 8
1ஆம் இடம்- செல்வன் சி.சிவாம்சன்
2ஆம் இடம்- செல்வன் ச.கீர்த்திகன்
3ஆம் இடம்- செல்வன் ஜெ.சாருஷன்

மத்திய பிரிவு தரம் 9, 10, 11
1ஆம் இடம்- செல்வன் ம.கஜகிருஷ்ணா
2ஆம் இடம்- செல்வன் உ.விதுஷன்
3ஆம் இடம்- செல்வன் சி.ராகுலன்

மேற் பிரிவு தரம் 12, 13
1ஆம் இடம் செல்வன் S.டினோசன்
2ஆம் இடம் செல்வன் S.கோகுலவசன்
3ஆம் இடம் செல்வன் S.காவிந்

### மாலை கட்டல் போட்டி

கீழ்ப்பிரிவு தரம் 6, 7,
1ஆம் இடம் செல்வன் உ.கஜலக்சன்
2ஆம் இடம் செல்வன் வி.சனுஜன்

மத்திய பிரிவு தரம் 8, 9
1ஆம் இடம் செல்வன் க.பதுஷன்
2ஆம் இடம் செல்வன் ந.லக்ஷன்
3ஆம் இடம் செல்வன் ச.பிரவீன்

மேற்பிரிவு 10, 11
1ஆம் இடம் செல்வன் கு.மயூகிருஷ்ணா
2ஆம் இடம் செல்வன் ம.கஜகிருஷ்ணா
3ஆம் இடம் செல்வன் கோ.பானுஜன்

**கோலப்போட்டி**

கீழ்ப்பிரிவு தரம் 6,7
1ஆம் இடம் செல்வன் த.துவாரகன்
2ஆம் இடம் செல்வன் கோ.சங்கமன்
3ஆம் இடம் செல்வன் க.விஸ்ணுகரன்

மத்திய பிரிவு தரம் 8, 9
1ஆம் இடம் செல்வன் க.பதுசனன்
2ஆம் இடம் செல்வன் ஜெ.சாருசன்
3ஆம் இடம் செல்வன் ச.பிரவீன்

மேற்பிரிவு தரம் 10, 11
1ஆம் இடம் செல்வன் கு.அச்சுதன்
2ஆம் இடம் செல்வன் கு.கிருசாந்தன்

**சகலகலா வல்லி மாலை**

கீழ்ப்பிரிவு தரம் 6, 7
1ஆம் இடம் செல்வன் சி.ஜனகராஜ்
2ஆம் இடம் செல்வன் சி.கோபிராம்
3ஆம் இடம் செல்வன் ம.ஜசான்

மத்திய பிரிவு தரம் 8,9
1ஆம் இடம் செல்வன் சி.மனாமிர்தன்
2ஆம் இடம் செல்வன் ப.பவதாரகன், ஜெ.தரணிதரன்

மேற்பிரிவு தரம் 10, 11
1ஆம் இடம் செல்வன் வ.கஜானன்
2ஆம் இடம் செல்வன் பி.சங்கீர்த்தன்
3ஆம் இடம் செல்வன் ர.அபிசாதன், வ.ஹம்சானந்

# நன்றியுரை

இந்து இளைஞர்கழகம் எமது கல்லூரியின் சமய செயற்பாடுகளை சிறப்புறச்செய்துவருகின்றது.பன்னிரு மாதங்களிலும் வருகின்ற விஷேட சமய தினங்களை சிறப்பாக கொண்டாடுவதோடு கல்லூரியில் எழுந்தருளியிருக்கின்ற சிவஞானவைரவர் ஆலய நித்திய,நைமித்திய பூசைகள் , சங்காபிஷேகம், ஆகியவற்றையும் சிறப்புற நடாத்தி வருகின்றது. நவராத்திரியை முன்னிட்டு பேச்சு,சகலகலாவல்லி மாலை, கோலம் போன்ற போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வருகின்றோம் . விஜயதசமி தினத்தன்று 'நவமலர்' சஞ்சிகையை வருடா வருடம் வெளியிட்டு வருகின்றோம். .இப் பணிகளுக்கு உறு துணையாக இருக்கின்ற கல்லூரி முதல்வர், பிரதி முதல்வர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்தக் கொள்வதோடு ஆலய கிரியை ஆற்றுகின்ற ஆச்சாரியாருக்கும் போட்டிகளை நடாத்தி ஒத்துழைத்தவர்களுக்கும் சொற் பொழிவுகளை நிகழ்த்திய சொற் பொழிவாளர்களுக்கும் ஒத்தழைப்பு வழங்கிய அனைத்து மாணவர்களுக்கும் நவமலர் சஞ்சிகையினை சிறப்புற அச்சிட்டு தந்த கங்கை அச்சகத்தாருக்கும் இந்த இளைஞர் கழகத்தின் காலத்தினால் அழியாத நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

# நன்றி

இந்து இளைஞர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்

உ

சிவமயம்

# கல்லூரிக்கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும்
(வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெரும் கலையகம் இதுவே
இளைஞர் உள மகிழ்ந்தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே– பல
கலைமலி கழகமும் இதுவே–தமிழர்
தலைநிமிர் கழகமம் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தரள் கொடு நன்றே

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே !
உயிரென கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பொருங் கலையகம் இதுவே!

வாழ்க! வாழ்க! வாழ்க!
தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு

கங்கை பிறிண்டேர்ஸ் யாழ்.0775553918